தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீடு எண்: **84/2026** நாள்: **17**.07.**2026**

செய்திக்குறிப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்: 18/2025, நாள் 02.12.2025-ன் வாயிலாக நேரடி நியமனத்திற்கு அறிவிக்கை வெளியிடப்பட்ட **அரசு உதவி வழக்கு நடத்துநர், நிலை-II** பதவிக்கான முதல்நிலைத் தேர்வு 15.02.2026 முற்பகல் நடைபெற்றது. இத்தேர்விற்கான முதன்மைத் தேர்வு (விரிந்துரைக்கும் வகை) 27.07.2026 முதல் 31.07.2026 வரை மு.ப சென்னை மையத்தில் மட்டும் நடைபெற உள்ளது.

தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு (Hall Ticket) தேர்வாணையத்தின் இணைய தளம் www.tnpsc.gov.in மற்றும் www.tnpscexams.in-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய ஒருமுறை பதிவு (OTR DASHBOARD) மூலமாக மட்டுமே விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை உள்ளீடு செய்து தேர்வுக்கூட நுழைவுச் சீட்டினை (Hall Ticket) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்